பக்கங்கள் 21+ 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆவணி 11 புதன்கிழமை 27.08.2025 | அதிர்வு 27

## தென்னக்கோன் இன்று பிணையில் விடுவிப்பு



முன்னாள்பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக் கோனைப் பிணையில் விடுதலை செய்யுமாறு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன் 

05▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

### தமிழ்த் தேசியப் பிரச்சினையை முறையாகக் கையாளும்

# திருப்புமுனைத் தீர்மானம் ஜெனிவாவில் மிக அவசியம்

### உறுப்பு நாடுகளுக்கு தமிழரசு கடிதம்

ஜெனிவாவில் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலின் வரவிருக்கும் அறுபதாவது கூட்டத் தொடர் அமர்வில் இலங்கை தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய தீர்மானம், ‘தமிழ்த் தேசியப் பிரச்சினையை’ முறையாகக் கையாளும் அளவுக்கு ஒரு திருப்புமுனையாக இருக்க வேண்டும் என கவுன்ஸிலின் உறுப்பு நாடுகளை இலங்கைத் தமிழரசுக் கட்சி இன்று கடிதம் மூலம் கோரியிருக்கின்றது.

02▶



## நிஷாந்தவுக்கு மறியல் நீடிப்பு

முன்னாள் கடற்படைத் தளபதி நிஷாந்த உலுகேதென்னவை எதிர் வரும் செப்டெம்பர் மாதம் 10 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கு மாறு பொல்கஹவெல நீதவான் நீதி மன்றம் இன்று புதன்கிழமை உத்தர விட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் கடற்படைத் தளபதி நிஷாந்த உலுகேதென்ன

04▶



## குளியாப்பிட்டியில் கோர விபத்து! 2 மாணவர்கள் உட்பட மூவர் பலி!!

குருநாகல் மாவட்டம், குளியாப்பிட்டியில் பல்லேவல பாலத்துக்கருகில் இன்று புதன்கிழமை காலை இடம்பெற்ற கோர விபத்தில் பாடசாலை மாணவர்கள் இருவர் மற்றும் வான் சாரதி உட்பட மூன்று பேர் உயிரிழந்துள்ளனர்.

04▶

## திருப்புமுனைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் தலைவர், செயலாளர் மற்றும் எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒப்பமிட்டு அனுப்பிய கடிதத்திலேயே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

கட்சியின் தலைவரும் வடக்கு மாகாண சபை அவைத் தலைவருமான சி.வி.கே.சிவஞானம், கட்சியின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞா.சிறிநேசன், க.கோடீஸ்வரன், சாணக்கியன் இராசமாணிக்கம், ச.குகதாசன், து.ரவிகரன், வைத்தியர் ப.சத்தியலிங்கம், வைத்தியர் இ. சிறிநாத் ஆகியோர் இதில் ஒப்பமிட்டுள்ளனர்.

‘இலங்கையில் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை ஊக்குவித்தல் - HRC 57/1’ என்ற தலைப்பிலான இந்தக் கடிதத்தின் முழு விவரம் வருமாறு:-

இலங்கையில் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை ஊக்குவித்தல் தொடர்பாக செப்டம்பர் 2024 இல் 57 ஆவது அமர்வில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மேற்படி 57/1 தீர்மானத்தின் காலம் செப்டெம்பர் 2025 இல் 60 ஆவது அமர்வோடு முடிவடைகின்றது.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு என்ற இரண்டு மாகாணங்களில் உள்ள ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட - தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற - முதன்மை அரசியல் கட்சி நாங்கள்தான். (1949 இல் தொடங்கப்பட்டதிலிருந்து சமஷ்டிக் கட்சி என்று நம் கட்சி அழைக்கப்படுகின்றது). அந்த வகையில் எங்கள் மக்களின் சில தீவிரமான கவலைகளை உங்கள் முன் வைப்பது எங்கள் கடமையாகக் கருதுகின்றோம்.

வரலாற்று ரீதியாக நாட்டின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் நிலைகொண்டு தமிழ் மக்கள் இலங்கையில் முற்காலத்திலிருந்தே வாழ்ந்து வருகின்றனர்.நாங்கள் எங்களுடைய சொந்த மொழி மற்றும் கலாச்சாரத்தைக் கொண்ட வேறுபட்ட மற்றும் தனித்துவமான மக்கள். பெரும்பான்மையான தமிழ் மக்கள் இந்துக்கள், தமிழ் பேசும் முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்கள். அதே நேரத்தில் சிங்களவர்கள் பெரும்பாலும் பௌத்தர்கள்.

ஐரோப்பியர்கள் இந்தத் தீவை வெற்றிகளுக்கு முன்பு இந்த தீவில் மூன்று ராஜ்ஜியங்கள் இருந்தன, அவற்றில் ஒன்று வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் இராஜ்ஜியம். பிரிட்டனிடமிருந்து (1833 இல் நிர்வாக வசதிக்காக மூன்று அலகுகளையும் இணைத்த பிரிட்டனிடமிருந்து) சுதந்திரம் பெற்ற நேரத்தில், ஒரு எளிய பெரும்பான்மை வகை அரசமைப்பு இங்கு இயற்றப்பட்டது, பின்னர் ஓர் அரசமைப்பால் அது மாற்றப்பட்டது. அது இலங்கையை ஓர் ‘ஒற்றையாட்சி நாடாக’ அங்கீகரித்து. பௌத்தத்திற்கு ‘முதன்மை இடம்’ வழங்கியது. மேலும் அது அரசமைப்பு ரீதியாக சிங்களத்தை மட்டுமே அதிகாரபூர்வ மொழியாக அங்கீகரித்தது.

இவை மற்றும் அவ்வப்போது தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட பிற பாகுபாடுகள் மற்றும் வன்முறைகள், காலனித்துவ சக்திகளிடம் இழந்த நமது இறையாண்மையை மீட்டெடுக்க கோருவதற்கு 1976 இல் எங்களைத் தூண்டின. இந்தக் கோரிக்கை பின்னர் அந்த நோக்கத்தை அடைவதற்கான ஆயுதப் போராட்டத்திற்கு வழிவகுத்தது.

இருப்பினும், அந்த ஆயுதப் போராட்டம் பாதுகாப்புப் படைகளால் இழைக்கப்பட்ட கடுமையான போர்க்குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் பிற சர்வதேச குற்றங்களுடன் 2009 இல் ஒடுக்கப்பட்டது.

இந்தச் சர்வதேச குற்றங்களில் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலையும் அடங்கும். அது, பல தசாப்தங்களாக வேண்டுமென்ற நோக்கத்துடன் மக்கள் மீது நடத்தப்பட்டு, போரின் கடைசி கட்டத்தில் தொடர்ச்சியான நிகழ்வுகளில் உச்சக்கட்டத்தை அடைந்ததது.

மிக சமீபத்தில் வடக்கில் யாழ்ப்பாணத்தில் உள்ள செம்மணியில் ஒரு மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டது. 150 எலும்புக்கூட்டு எச்சங்கள் - அவற்றில் 96 விதமானவை ஒட்டுத் துணிகள். கூட இல்லாமல் - ஒரு சிறிய சதுக்கத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அந்தப் பகுதியை ஸ்கேன் செய்ததில் இன்னும் பல உடல்கள் இருப்பதற்கான வாய்ப்பு உள்ளமை தெரியவந்தது.

தண்டனை பெற்ற ஒரு சிப்பாய் 1999 இல் நீதிமன்றத்தில் இராணுவத்தால் இந்தப் பகுதியில் நூற்றுக்கணக்கான உடல்கள் புதைக்கப்பட்டன என்பதை வெளிப்படுத்தினார். 1990களின் நடுப்பகுதியில் அந்தப் பகுதியில் காணாமல் போனவர்கள் குறித்து விசாரித்த மனித உரிமைகள் ஆணையத்தின் அறிக்கைகளும் உள்ளன. இவை அனைத்தும் இனப்படுகொலை செய்யும் நோக்கம் உண்மையில் இருந்தது என்பதை தெளிவாக சுட்டிக்காட்டுகின்றன மற்றும் மேலும் அதற்கு வலுச் சேர்க்கின்றன.

இலங்கை அரசு தமிழ் மக்களுக்கு எதிராகச் செய்துள்ள குற்றங்களின் அளவையும், அவற்றின் விஸ்தாரத்தையும் நீங்கள் புரிந்துகொள்ளும் பொருட்டு, மேற்கண்ட விஷயங்களை உங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகின்றோம். மனித உரிமைகள் கவுன்சிலில் ஒரு தசாப்தத்திற்கும் மேலாக இந்த விஷயத்தை சர்வதேச கவனத்தின் கீழ் வைத்திருப்பதில் நீங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளை நாங்கள் மிகவும் மெச்சுகின்றோம்.

ஒக்டோபர் 2015 இல், கவுன்சில் HRC/30/1 இலக்கத் தீர்மானத்தை நிறைவேற்றியது. அதற்கு இலங்கையும் இணை அனுசரணை வழங்கியது, ஆயினும் பின்னர் அதிலிருந்து அது விலகியது. அந்தத் தீர்மானம் சர்வதேச நீதிபதிகளின் பங்கேற்புடன் ஒரு கலப்பின நீதிமன்றத்திற்கும், மீண்டும் நிகழாததற்கான உத்தரவாதமாக செயல்படும் ஒரு புதிய அரசமைப்பிற்கும் வழிவகுக்க முன்னெடுக்கப்பட்டது.

இந்த விடயத்தை ஒட்டி தற்போது இலங்கையின் பொறுப்புக்கூறல் திட்டம் தொடர்பான அலுவலகம், இந்த விவகாரம் மேலும் தொடரப்பட வேண்டும் மற்றும் விரிவுபடுத்தப்பட வேண்டும், மற்றும் திட்டம் முன்கூட்டியே முடிக்கப்பட வேண்டும் என்பதற்காக ஆதாரங்களைச் சேகரித்து அவற்றைப் பாதுகாக்கிறது. அதன் பிறகு இந்த விஷயம் தீர்க்கமான நடவடிக்கைகளுக்காக பிற பொருத்தமான ஐ.நா. அமைப்புகளுக்கு பரிந்துரைக்கப்பட வேண்டும்.

இலங்கை ரோம் சட்டத்தில் இன்னும் கையொப்பமிடவில்லை. எனவே விரைவில் அதை ஏற்றுக்கொள்ள வலியுறுத்தப்பட வேண்டும். இலங்கை மனித உரிமைகள் ஆணையத்தின் மாற்று அறிக்கை இதைச் செய்ய பரிந்துரைக்கிறது. இதேபோல், உயர் ஸ்தானிகரின் முற்கூட்டிய அறிக்கையின் நகலிலும் கூட அதே பரிந்துரை கவுன்ஸிலுக்குச் செய்யப்படுகிறது என்பதை நாங்கள் அவதானித்துள்ளோம். அந்த வகையில், பொறுப்புக்கூறல் பிரச்சினைகள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பரிந்துரைக்கப்படலாம். மேலும் இனப்படுகொலை பிரச்சினையை சர்வதேச நீதிமன்றத்திலும் பொருத்தமான வழிமுறைகள்மூலம்எடுத்துக்கொள்ளலாம்.

பொறுப்புக் கூறல் விவகாரத்தில் உள்ளூர் வழிமுறைகள் மூலம் முன்னேற்றம் இல்லாதமை குறித்து உயர் ஆணையர் (தமது அறிக்கையில்) விமர்சன ரீதியாகக் கருத்து தெரிவித்திருந்தாலும், பாதிக்கப்பட்ட சமூகம் இந்த அறிக்கை இலங்கையில் பொறுப்புக்கூறலுக்கான உள்ளூர் வழிமுறைகளை - அவை ஒன்றரை தசாப்தங்களுக்கும் மேலாக பயனற்றவை என்று நிரூபிக்கப்பட்ட பின்னரும் - அவற்றை நம்பியிருப்பதாகத் தோன்றுவது குறித்து ஏமாற்றமடைகின்றது.


காணாமல் போனோர் அலுவலகம் போன்ற அமைப்புகளில் சர்வதேச பங்கேற்புக்கான யோசனை போன்றவை கூறப்பட்டுள்ளன. எனவே அத்தகைய ஈடுபாட்டை பரிந்துரைப்பது பயனுள்ளதாக இருக்கும். இது போன்றவை எங்களுக்கு ஓரளவு நம்பிக்கையைத் தரும் சில ஏற்பாடுகளாகும்.

வரவிருக்கும் 60 ஆவது அமர்வில் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய தீர்மானம், ‘தமிழ் தேசியப் பிரச்சினையை’ முறையாகக் கையாளும் அளவுக்கு ஒரு திருப்புமுனையாக இருக்க வேண்டும்.

எனவே, இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகளாக, ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய தீர்மானத்தில் பின்வருவனவற்றை சாதகமாகக் கருத்தில் கொள்ளுமாறு நாங்கள் உங்களை வலியுறுத்துகின்றோம்:

1. செம்மணி - சிந்துபாதி இந்து மயானத்தில் ஒரு சிறிய பகுதியில் 150 எலும்புக்கூடு எச்சங்கள் சமீபத்தில்

(03ஆம் பக்கம் பார்க்க)



# ரணிலுக்கு இருதய அறுவைச் சிகிச்சை உடனடியாகச் செய்யப்பட வேண்டும்!

## வைத்தியர் ருக்ஷன் பெல்லன தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உடனடியாக இருதய அறுவைச் சிகிச்சை செய்யப்பட வேண்டும் என்று கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ருக்ஷன் பெல்லன தெரிவித்துள்ளார்.

அறுவைச் சிகிச்சையை தேசிய வைத்தியசாலையில் செய்வதற்காகக் காத்திருப்பு பட்டியலில் இருக்க வேண்டும் என்றும், அவ்வாறு முடியாவிடின் தனியார் வைத்தியசாலைக்குச் சென்று அதைச் செய்யும் வாய்ப்பு ரணில் விக்கிரமசிங்கவுக்கு உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இதயத்தில் சில சிக்கல்கள் உள்ளன. விரைவில் அறுவைச் சிகிச்சைக்கு உட்படுத்தினால் நல்லது.

அவருக்கு நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்டுள்ளமையால் அறுவைச் சிகிச்சைக்காக அவர் விரும்பும் வைத்தியசாலைக்குச் செல்லலாம். தேசிய வைத்தியசாலையில் காத்திருப்புப் பட்டியல் சில நேரங்களில் சுமார் 3 ஆண்டுகள் ஆகும்.

எனவே, அவர் தனது சொந்தச் செலவில், விரும்பும் வைத்தியசாலையில் அதை விரைவாகச் செய்ய முடியும்.

தற்போது, அவருக்குக் கரோனரி தமனிகளில் அடைப்பு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அவருக்கு நீரிழப்பும் உள்ளது.

அந்த நிலை படிப்படியாகச் சரி செய்யப்பட்டு வருகின்றது. அந்த நேரத்தில், அவரது இருதயம் பலவீனமாக இருப்பதைக் கண்டறிய முடிந்தது. அதை இயல்பு நிலைக்குக் கொண்டுவர அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டியிருக்கும்."
– என்றார்.

---

## திருப்புமுனைத்...

(02ஆம் தொடர்ச்சி)

கண்டுபிடிக்கப்பட்ட நிலையில், இன்னும் பெரிய அளவிலான அகழ்வாராய்ச்சிகள் செய்யப்பட வேண்டிய பகுதிகள் உள்ளன. அதன் மூலம் இனப்படுகொலை செயல்கள் மட்டுமல்ல, இனப்படுகொலை நோக்கத்திற்கான சான்றுகளும் பெருகி வருகின்றன. இந்த சூழலில், மியான்மர் வழக்கைப் போலவே விசாரணைகளை அமைப்பதற்காக இலங்கையை சர்வதேச நீதிமன்றத் திற்கு பரிந்துரைப்பதை தீவிரமாக பரிசீலிக்குமாறு உறுப்பு நாடுகளை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

2. போர்க்குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், சர்வதேச மனித உரிமைகள் சட்ட மீறல்கள் போன்றவற்றைத் தவிர, அதற்கு மேல் இனப்படுகொலை மற்றும் இனப்படுகொலை நோக்கத்தை சுட்டிக்காட்டும் ஆதாரங்களை சேகரிப்பதையும் இலங்கை பொறுப்புக் கூறல் திட்ட அலுவலகத்தின் நோக்கமாக விரிவுபடுத்த வேண்டும். இலங்கை பொறுப்புக் கூறல் திட்ட அலுவலகத்தின் இந்த ஆதாரங்களை சேகரித்தல் மற்றும் பாதுகாத்தல் ஆகியவை விசாலமான நோக்கத்துடன் தொடரப்பட வேண்டும். மேலும் திட்டம் முன்கூட்டியே முடிக்கப்பட வேண்டும்.

3. பாதுகாப்பு கவுன்ஸில் தீர்மானத்தின் மூலம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பரிந்துரைப்பது கிட்டத்தட்ட சாத்தியமற்றது என்றாலும், தேசிய மனித உரிமைகள் ஆணையம் மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையர் பரிந்துரைத்தபடி ரோம் சட்டத்தில் கையெழுத்திட்டு அங்கீகரிக்க இலங்கை அரசை வற்புறுத்த வேண்டும்.

4. மீண்டும் நிகழாமல் இருப்பதற்கான ஒரு நடவடிக்கையாக, தமிழ் மக்களுடன் புதிதாக பேச்சு நடத்தி, இணக்கம் கண்டு, வடக்கு - கிழக்கில் விரிவான அதிகாரப் பகிர்வுடன் கூடிய புதிய சமஷ்டி அரசமைப்பை இயற்ற இலங்கையை தொடர்ந்து வற்புறுத்த வேண்டும். உடனடி நடவடிக்கையாக, மாகாண சபைத் தேர்தல்களை மேலும் தாமதமின்றி நடத்த இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும்." - என்றுள்ளது.

# நீதிமன்ற நுழைவைத் தடுத்தவர்களை கைது செய்யுமாறு சி.ஐ.டிக்கு உத்தரவு



முன்னாள் ஜனாதிபதி ரணிலுக்கு எதிரான வழக்கு விசாரணையின் போது நீதிமன்ற நுழைவைத் தடுத்தவர்களை உடனடியாகக் கைது செய்யுங்கள் என சி.ஐ.டிக்கு கொழும்பு, கோட்டை நீதிமன்ற நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து கொம்பனித்தெரு பகுதியில் நேற்று ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் போத்தல் ஒன்றினால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பிலும் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



# தம்புள்ளையில் 5 வாகனங்கள் மோதி விபத்து; ஒருவர் காயம்

கொழும்பு – திருகோணமலை பிரதான வீதியில் தம்புள்ளை, போஹோரான்வெவ பகுதியில் ஐந்து வாகனங்கள் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

இன்று இடம்பெற்ற இந்த விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

கொழும்பில் இருந்து தம்புள்ளை நோக்கிச் சென்ற மூன்று வாகனங்கள் எதிர்த் திசையில் சென்ற லொறி மற்றும் கார் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் தம்புள்ளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## குளியாப்பிட்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலை வான் ஒன்று லொறியுடன் மோதியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இதன்போது, 13 மாணவர்கள் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நிஷாந்தவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று நீதி மன்றத்தில் ஆஜர்படுத் தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடற்படைத் தளபதியாக நிஷாந்த உலுகேதென்ன கடமையாற்றிய காலத்தில் குருநாகல் – பொத்துஹெர பிரதேசத்தில் இளைஞர் ஒருவர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளின் அடிப்படையில், நிஷாந்த உலுகேதென்ன கடந்த ஜூலை மாதம் 28 ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட நிலையில் நீதிமன்ற உத்தரவின் கீழ் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தென்னக்கோன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றம் இன்று புதன்கிழமை உத்தரவிட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு மே மாதம் 9 ஆம் திகதி கொழும்பு – காலிமுகத்திடலில் போராட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பான விசாரணைகளில் முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் சந்தேகநபராகப் பெயரிடப்பட்டிருந்தார்.

காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் தன்னைக் கைது செய்வதைத் தடுக்குமாறு உத்தரவிடக் கோரி தேசபந்து தென்னக்கோன் கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் முன் பிணை மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

ஆனால் தேசபந்து தென்னக்கோனின் முன்பிணை மனு நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது.

இதனையடுத்து முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் மிரிஹான பகுதியில் உள்ள அவரது வீட்டில் வைத்து கடந்த 20 ஆம் திகதி குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் இன்று பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சேர்ந்து காரியமாற்றுக!

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை உப்புச்சப்பற்ற காரணத்துக்காகக் கைது செய்த தேசிய மக்கள்சக்தி அரசு, அவரைத் தொடர்ந்து விளக்கமறியலில் தடுத்து வைப்பதற்கு எடுத்த முயற்சி இப்போதைக்கு முடிவுக்கு வந்திருக்கின்றது.

இந்த விடயத்தில் அவருக்காகத் திரண்டு எழுந்த சட்டத்தரணிகள், பொதுமக்கள், பிற கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரமுகர்களுக்கு அவரது ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்கள் நன்றி கூறி வருகிறார்கள்.

இந்த விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சியினரும் அக்கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவும் சில முக்கிய அம்சங்களை இப்போதாவது கவனத்தில் கொள்ள வேண்டும்.

தங்களுக்குள் இருக்கின்ற பிரச்சினையைத் தீர்க்காமல் சஜித் பிரேமதாஸவும் ரணில் விக்கிரமசிங்கவும் மோதிக்கொண்டதன் விளைவுதான் இந்த ஆட்சியாளர்கள் இத்துணை வலிமையாக எழுச்சி பெற்றமைக்கான காரணம் என்பதை ஐக்கிய தேசியக் கட்சியினர் மட்டுமல்லாமல் இப்போது அவர்களுக்காக ஒன்றுபட்டு குரல் எழுப்ப வந்த ஐக்கிய மக்கள் சக்தியினரும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்தக் கட்டத்திலாவது இந்தப் பாடத்தை புரிந்து கொண்டு, தங்களுக்குள் கால்வாரும் விவகாரத்தை ஒத்தி வைத்துவிட்டு, 2015இல் எதேச்சாதிகார ஆட்சியை வீழ்த்துவதற்கு ஒன்றுபட்டமை போல, சேர்ந்து இயங்கத் தயாரானால் மட்டுமே இப்போதைய நெருக்கடியில் இருந்து இந்த இரண்டு கட்சிகளும் மீண்டெழ வாய்ப்பேனும் கிட்டும்.

தன்னுடைய உடல்நிலைமை மற்றும் அரசியல் களநிலைமைகளை ரணில் விக்கிரமசிங்க புரிந்து கொள்ள வேண்டும். அவருக்கான அரசியல் எதிர்காலம் நீண்டதாக இருக்கப் போவதில்லை - அவரது வயது மற்றும் உடல் நிலை கருதி. ஆகையினால், தமது தரப்பினதும், தமது கட்சியிலிருந்தும் உருவாகிய தரப்பினரதும் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு விடயங்களை அவர் சுயநலன் துறந்து, நகர்த்த முன்வர வேண்டும்.

இப்போதுள்ள சூழ்நிலையில் அவர் உடல் நலம் தேறி, மீண்டும் நாடாளுமன்றத்துக்குள் கட்சியின் தேசிய பட்டியல் மூலம் நுழைவார் என்ற ஒரு பேச்சு உண்டு. அது, தற்போதைய ஆட்சியாளர்களுக்கு எதிரான வலிமையான எதிரணி ஒன்றை நாடாளுமன்றத்துக்குள்ளும் உருவாக்க வழி செய்யும் என எதிர்பார்க்கலாம்.

அதேபோல ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸவும் தம்முடைய கட்சிக்குள் இருக்கும் கொதி நிலைகளையும், ஐக்கிய தேசியக் கட்சியோடு சேர்ந்து அரசியலில் செயலாற்ற வேண்டிய யதார்த்தப் புறநிலைகளையும் புரிந்து கொண்டு, அரசியல் செல்நெறி மாற்றத்துக்கு முன்வர வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு இடம் அளிப்பது என்பது நீண்ட காலம் சஜித் பிரேமதாஸவைப் புறம் தள்ளி வைத்து விடாது என்ற யதார்த்தத்தை சஜித் இன்றைய கட்டத்திலாவது கருத்தில் கொள்ள வேண்டும்.

இந்த இரண்டு தலைவர்களின் முரண்பாட்டினால் பேரெழுச்சி பெற்றுள்ள தேசிய மக்கள் சக்தியை உரிய முறையில் கட்டுப்படுத்திக் கையாள்வதாயின் ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் சேர்ந்து பிற எதிர்க்கட்சிகளை அரவணைத்து, ஒன்றுபட்டு செயற்பட வேண்டும். அதை சஜித்தும் ரணிலும் புரிந்து கொண்டால் அவர்கள் இருவருடைய கட்சிகளுக்கும் எதிர்காலம் உண்டு. இல்லையேல், கடந்த வாரத்தில் நடந்தது போன்ற பல நெருக்கடிகளை எதிர்க்கட்சிகள் தொடர்ந்து நீண்ட காலத்துக்கு எதிர்கொள்ள வேண்டி இருக்கும்.



# பிரதமர் ஹரிணி - அமெரிக்கத் தூதுவர் குழு சந்திப்பு

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவுக்கும் ஐக்கிய அமெரிக்காவின் பிரதிநிதிகள் சபையின் ஜனநாயகத்துக்கான பங்குடைமைக் குழுவின் உறுப்பினர்களுக்கும் இடையில் கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் பிரதமர் அலுவலகத்தில் இன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கும் கலந்து கொண்டார்.

இந்தக் கலந்துரையாடலின் போது, இலங்கையின் பொருளாதாரம், சட்டங்கள், அரசியல் செயற்பாடுகள் ஆகியவற்றை வலுப்படுத்துவதில் ஐக்கிய அமெரிக்காவின் பிரதிநிதிகள் சபையின் ஜனநாயகத்துக்கான பங்குடைமை குழுவின் பங்களிப்பு எடுத்துக்காட்டப்பட்டது.

இதன்போது, பிரதமர், இலங்கையில் பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை, சட்டவாக்கத்தின் பலம் மற்றும் பொருளாதார வளர்ச்சியை வலுப்படுத்துதல் ஆகியவற்றுக்கு அமெரிக்க காங்கிரஸ் சபையின் ஜனநாயக ஒத்துழைப்புக் குழுத் திட்டத்தின் பங்காளித்துவத்தின் முக்கியத்துவம் வலியுறுத்தினார்.

இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட ஐக்கிய அமெரிக்காவின் பிரதிநிதிகள் சபையின் ஜனநாயகத்துக்கான பங்குடைமைக் குழுவின் பிரதிநிதிகள், நாடாளுமன்றத்துடன் முன்னெடுக்கப்படும் கண்காணிப்புச் செயல்முறை, குடிமக்களின் பங்களிப்பு மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் தொடர்பில் அவர்களது பங்களிப்பை பற்றிச் சுட்டிக்காட்டினர்.

இந்தக் கலந்துரையாடலின் போது நாடாளுமன்றத்திலும் தேசிய தலைமைத்துவத்திலும் பெண்களின் பங்களிப்பு மற்றும் தொழில் படையில் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இதன்போது அரசியலில் பெண்களின் பங்களிப்பு மற்றும் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது.












# மன்னாரில் 25 ஆவது நாளாக தொடரும் போராட்டம்; பல்வேறு கிராம மக்களும் சுழற்சி முறையில் ஆதரவு!

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னாரில் காற்றாலை கோபுரங்கள் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிராக முன்னெடுக் கப்பட்டுவரும் கவனவீர்ப்புப் போராட்டம் இன்று புதன்கிழமை (27) 25 ஆவது நாளாகவும் சுழற்சி முறையில் முன்னெ டுக்கப்பட்டது. இந்த நிலையில் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் நானாட்டான் பிரதேச மக்கள் கலந்து கொண்டனர்.

மன்னார் நகர சுற்றுவட்டப் பகுதியில் இடம் பெற்று வரும் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி போராட் டத்தில் ஈடுபட்டனர்.

மன்னாரில் புதிதாக முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை மின் கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவை முழுமையாக நிறுத்தப்படும்வரை தமது போராட்டம் தொடரும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.












# தமிழர்களுக்கான சர்வதேச நீதியை மறுப்பதற்கு முன்னேற்பாடான செயற்பாடே ரணிலின் கைது!

## அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவிப்பு



(பா.சதீசன்)

சர்வதேசத்தின் நீதிக் கண்களில் மண்ணைத் தூவவும், தமிழருக்கான நீதியை மறுப்பதற்குமான ஒரு முன்னேற்பாடான செயற்பாடாகவே முன்னாள் ஜனாதிபதி ரணிலைக் கைது செய்துள்ள சம்பவம் தோற்றுவிக்கிறது என்று சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவர் இன்று (27) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சட்டம், நீதி அனைவருக்கும் சமம். பதவி, தகுதி, சமூக நிலை பார்க்கப்பட மாட்டாது. குற்றம் புரிந்தவர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட்டு சட்டத்துக்கு ஏற்ப தண்டிக்கப்படுவார்கள். இதில் நாம் பின்வாங்க மாட்டோம் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் தற்போதைய ஜனாதிபதியுமான அநுரகுமார திசாநாயக்க தேசிய பிக்குகள் பேரவை கூட்டத்தில் நேற்று மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

ஆனால் போர் குற்ற விசாரணை நடைபெறும் குற்றவாளிகள் எவரும் தண்டிக்கப்பட மாட்டார்கள் என ஏற்கனவே கூறி இருந்தமையை நினைக்கும் போது சட்டம் நீதி தொடர்பில் அவரின் இரட்டை நாக்கு நிலைப்பாட்டையும், அரசியல் சித்து விளையாட்டையும் வெளிபடுத்துகின்றது. மனுதர்ம சட்டத்தின் படி இதுவும் குற்றமே. இதுவும் தண்டிக்கப்பட வேண்டியதே.

பௌத்த தர்மத்தின்படி பிக்குகள் என்போர் பதவி, தகுதி, சமூக நிலை, சொத்து, சுகம் அனைத்தையும் கடந்தவர்கள். சமூகத்தின் அடிப்பட்ட மக்களின் வாழ்வியலோடு பயணிப்பதன் அடையாளமாகவே பிச்சை பாத்திரம் ஏந்தி வாழ்வுக்கு முன்னுதாரணம் காட்டுகின்றனர். அத்தகையவர்கள் அரச கட்டமைப்பால் பாதிக்கப்பட்டு சட்டம், நீதி, சமம் மறுக்கப்பட்டமைக்காகக் குரல் கொடுக்க முன் வருவதோடு அதற்கு ஜனாதிபதிக்கும் அவர் இயக்கும் அரசுக்கும் அழுத்தம் கொடுக்குமாறு கேட்கின்றோம். சிங்கள பௌத்த படையினருக்கு ஒரு நீதி அவர்களால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு ஒரு நீதி என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. இதனை மாற்றுவதன் மூலமே சட்ட சமத்துவத்தை அனுபவிக்க முடியும். அம் மாற்றத்துக்குக் குரல் கொடுக்க வேண்டும் எனவும் கேட்கின்றோம்.

வடக்கில் தையிட்டியில் படையினர் தனியார் காணியை பலவந்தமாக ஆக்கிரமித்து சட்டவிரோத கட்டடம் அமைத்து அதனை விகாரையாக்கி வழிபாடு நடத்துவது சட்டத்தின் சமநிலை அவலத்தை நிரூபித்துக் காட்டுகின்றது. ஆக்கிரமிப்பு பௌத்தத்தைப் பாதுகாக்க அங்கு பிக்கு ஒருவரையும் நியமித்து வழிபாடு எனும் போர்வையில் தமிழர்களின் மனதில், வாழ்வில் பாதிப்பு ஏற்படும் வகையில் மாதந்தோறும் சட்டவிரோத கூட்டத்தை கூட்டுவது எந்த சட்டத்தின் கீழ் நியாயமாகும். இதனை பிக்குகள் பேரவை ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறி காணி பறிக்கப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி மறுக்கப்படுகின்றமையை நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த முன்வரல் வேண்டும்.

அதிகார துஷ்பிரயோகம், ஊழல், மக்கள் பணம் சூறையாடல் என்பன தண்டனைக்குரிய குற்றமாகத் தேசிய மக்கள் சக்தியினர் தினம் தினம் பாராயணம் பாடுவது கேட்கின்றது. அதன் ஓர் அங்கமாக முன்னாள் ஜனாதிபதியைக் கைது செய்து சிறைச்சாலைக்குள் தள்ளி வழக்கு தொடுத்திருப்பது வரவேற்கத்தக்கதே.

அதேபோன்று வடக்கில் தையிட்டில் அமைந்துள்ள தீர்த்த விகாரையும் அதிகார துஷ்பிரயோகம், பணம் கையாளல் தமிழ் சிந்தனை மக்களுக்கு இடையில் சமய முரண்பாடு தோற்றுவித்தல் என்பதை அடையாளப்படுத்துகின்றது. ஆனால் அது தொடர்பில் இதுவரையில் ஜனாதிபதி எந்த வகையிலும் ஆக்கபூர்வமான சட்ட ரீதியான செயற்பாடுகளை முன்னெடுக்காததுஏன். பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள் என்பதற்காகவா அல்லது சட்டத்தால் பாதிக்கப்படுபவர்கள் படையினர் என்பதற்காகவா? இந்த இரட்டை நிலைப்பாட்டில் இருந்து ஜனாதிபதி வெளிவரல் வேண்டும். தேசிய மக்கள் சக்தி மாற்றத்தினை உறுதிப்படுத்தலும் வேண்டும்.

பாரிய இனப்படுகொலையோடு முள்ளிவாய்க்காலில் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. இந்த யுத்தத்தின் போது படையினர் தமிழர்களுக்கு எதிராக மனித குலம் ஏற்காத குற்றமும் சர்வதேச போரியல் விதிமுறைகளையும் மீறி இனப் படுகொலையில் ஈடுபட்டனர் என்பதை சர்வதேசமும் அறிந்ததே.

இலங்கையில் படுகொலை நிகழ்ந்தது என்பதற்குச் செம்மணி உட்பட வடக்குக் கிழக்கில் காணப்படும் சமூக புதைகுழிகள் சாட்சியாக எழுந்துள்ளன. அதுமட்டுமன்றி தம் அன்புறவுகளை இறுதி யுத்தத்தின் போது படையினரிடம் கையழித்துவிட்டு அவர்கள் திரும்ப வராத நிலையில் தொடர் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கின்றனர். காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி கேட்டு சர்வதேசத்தின் கதவுகளை தட்டிக் கொண்டிருக்கின்ற போது சர்வதேசத்தின் நீதி கண்களில் மண்ணைத் தூவவும், தமிழருக்கான நீதியை மறுப்பதற்கும் ஒரு முன்னேற்பாடான செயற்பாடாகவே முன்னாள் ஜனாதிபதியை கைது செய்து அமைந்துள்ளதாகத் தோன்றுகின்றது.

நாட்டின் சட்ட துறையும் நீதியும் தகுதி, பதவி நிலை பாராது செயற்படுகின்றது எனக் கூறி இலங்கை நாட்டை பிணை எடுக்கவும் குற்றமிழைத்த பாதுகாப்பு படையினருக்கு எதிராக உள்நாட்டு விசாரணை நடத்த சந்தர்ப்பம் தாருங்கள் எம் மீது நம்பிக்கை வையுங்கள் எனக் கூறவே அவசர அவசரமாக ரணிலின் கதை நடைபெற்றதோ எனவும் சந்தேகம் கொள்கின்றோம். ஏனெனில் இந்தக் கைது ஜெனீவா மனித உரிமை பேரவை கூட்டத்தொடரை அண்மித்தே நடந்துள்ளது.

ரணில் வெளிநாட்டில் செலவழித்த அரச பணம் மிகச் சொற்பமே. அதற்குத் தண்டனை கொடுப்பது அநீதியானது. ஆனால் பட்டலந்த வதை முகாம், மத்திய வங்கி பணமோசடி தொடர்பில் வழக்குத் தொடருங்கள். நாம் அதற்கு ஆதரவளிப்போம் எனக் கூறி ஏழை மக்களை வீதியில் இறக்க ஒன்று கூடிய அரசியல் போர் குற்றங்கள் தொடர்பில் தமிழர்கள் கேட்கும் சர்வதேச விசாரணைக்கு ஆதரவு தெரிவிப்பார்களா? அத்தகைய குரல் எங்கும் எழவில்லை எழப்போவதுமில்லை. ஏனெனில் ஒன்று வர்க்க அரசியல். இன்னொன்று சிங்கள பௌத்த பேரினவாத அரசியல்.

ஒரு நாட்டில் சட்டம், நீதி என்பன இனம், மொழி, சமயம் சார்ந்ததாக இருக்குமெனில் அங்கு இருள் கவ்வும் என்பது உண்மை. இலங்கையைப் பொறுத்தளவில் நாட்டின் அரசியல் யாப்பு இனம், சமயம், மொழி சார்ந்ததாகவும் அரச கட்டமைப்புகள் அதன் காவலாகத்திகழும் போது சமத்துவத்தை மக்கள் அனுபவிக்க முடியாது. அதனை மாற்ற முனையாது சட்டம் அனைவருக்கும் சமம் என்பவர்கள் அரசியல் நாடக வாதிகளே.

கடந்த 75 ஆண்டுகளாக இன அழிவுக்கும் இனப்படு கொலைக்கும் முகம் கொடுப்பதற்கு யாப்பு ரீதியிலான அரசியல் பாதுகாப்பு இன்னமையே காரணமாகும். அதனை முதுகெலும்பு இல்லா அரசியல்வாதிகள் நரி பரம்பரையினரே. அனைத்து மக்களின் இன, சமய, மொழி, கலை, கலாச்சார, பண்பாட்டு அடையாளங்களையும் தனித்துவத்தையும் பாதுகாக்கும் போதே நாட்டில் நீதியும் சட்டமும் சமத்துவமாக அமையும். அதற்கு முற்போக்கு சிந்தனை கொண்ட மக்கள் சக்தி எழுச்சி ஒன்று மட்டுமே வழிவகுக்கும்.- என்றுள்ளது.




# "சமூக வலிமை நிறைந்த நாடு" என்னும் தொனிப் பொருளில் துடுப்பாட்டச் சுற்று!

சமுர்த்தியின் மூன்று தசாப்த கால நினைவுகளுடன் "சமூக வலிமை நிறைந்த நாடு" எனும் தொனிப் பொருளில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக் களமும் கிளிநொச்சி மாவட்ட செயலகமும் இணைந்து பிரதேச மட்ட அணிகளுக்கிடையில் நடத்திய மாவட்ட மட்ட மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப் போட்டியில் பச்சிலைப்பள்ளி பிரதேச அணி சம்பியனாகியது .கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதா னத்தில் நடைபெற்ற சுற்றுப் போட்டிகளில் பச்சிலைப்பள்ளி, பூநகரி, கரைச்சி, கண்டாவளை ஆகிய பிரதேச செயலகங் களின் அணிகள் கலந்து கொண்டன. கடந்த 20 ஆம் திகதி இடம் பெற்ற இறுதிப் போட்டியில் பச்சிலை பள்ளி பிரதேச செயலக அணியினர் சம்பியனைச் சுவீகரித்துக் கொண்டனர்.



# உடப்பு கிராமக் கடலோரப் பகுதியில் பிளாஸ்ரிக் மூலப் பொருள் தரம்பிரிப்பு

**(உடப்பு க.மகாதேவன்)**

புத்தளம் மாவட்டம், உடப்பு கிராம கடலோரப் பகுதியில் பிளாஸ்ரிக், பொலித்தீன் தயாரிப்பு மூலப் பொருள்கள் அண்மைக் காலத்தில் பெருமளவு கரையொதுங்கிக் காணப்பட்டன.

மெரின்சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிறுவனத்தின் உதவியுடன், இந்த மணிபோன்ற பொருள்களைத் தரம் பிரித்துச் சேர்க்கும் வேலைத்திட்டம் உடப்பு அறுவாய்ப் பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த வேலைத் திட்டமானது சுமார் ஆறு மாதங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது உடப்பிலுள்ள 20 இற்கும் மேற்பட்டவர்கள் இந்த வேலைத்திட்டத்தில் இணைந்து கொண்டனர். இவர்களுக்கு நாள்களுக்கு உரிய கொடுப்பனவும் வழங்கப்படுகிறது.






# கிராமிய வீதி அபிவிருத்தித் திட்டத்தில் வீதிகள் அங்குரார்ப்பண நிகழ்வு!

**(பாறுக் ஷிஹான்)**

சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவின் கீழ் மல்வத்தை-01, மல்வத்தை-02 மற்றும் மலையடிக் கிராமம் - 04 ஆகிய கிராம சேவகர் பிரிவில் சுமார் 15 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் மல்வத்தை - 02 புதுநகர் முதலாம் குறுக்குத் தெரு, மல்வத்தை-01 திருவள்ளுவர் புறம் சின்னத்தம்பி வீதி மற்றும் மலையடிக் கிராமம் - 04 அஸ் ஸமா பாடசாலை வீதி ஆகிய வீதிகளின் புனரமைப்புக் கான அங்குரார்ப்பண நிகழ்வு சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ். எல் முஹம்மது ஹனீபா தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.ஆதம் பாவா கலந்து கொண்டு வீதி வேலைகளை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஏ முனாஸீர், மாவட்ட செயலக கணக்காளர் ஐ.எம்.பாரீஸ், சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர்களான வை.வி.எம். நவாஸ், எஸ். தீம் ஜனாப், எஸ்.எல்.ஏ. நஸார், ஏ.சீ. சஹீல், எஸ்.டனோஜன், காரைதீவு பிரதேச சபை உறுப்பினர் ஏ.பர்ஹான்,தேசிய மக்கள் சக்தியின் வளத்தாப்பிட்டி கிராம அமைப்பாளர் எஸ்.சாந்தகுமார், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர்கள், தேசிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# வேலணைப் பிரதேச செயலகத்தில் புதிய பிரதேச செயலர் கடமையேற்பு

வேலணை பிரதேச செயலகத்துக்குப் புதிதாக நியமிக்கப்பட்ட பிரதேச செயலாளர் த. அகிலன் இன்று (27) கடமையேற்றுள்ளார்.

வேலணை பிரதேச செயலகத்துக்குப் புதிதாக நியமிக்கப்பட்ட தனபாலசிங்கம் அகிலன் இன்று காலை 10 மணிக்கு அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் முன்னிலையில் கடமையேற்றார்.

நிகழ்வில் முன்னர் பிரதேச செயலராகக் கடமையாற்றித் தற்போது யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபராகக் கடமையாறும் க. சிவகரன் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் ஆ. சத்தியமூர்த்தி ஆகியோர் உடனிருந்தனர்.







# கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரரில் கருங்கல்லால் புனரமைப்புப் பணி ஆரம்பம்!

**(வி.ரி.சகாதேவராஜா)**

வரலாற்று பிரசித்தி பெற்ற கொக்கட்டிச்சோலை தான்தோறீஸ்வரர் ஆலயத்தின் கருவறை மற்றும் மண்டபம் கருங்கல்லால் அமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கான கருங்கற்கள் இந்தியா மற்றும் மன்னாரில் இருந்து தருவிக்கப்பட்டுள்ளன.

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ மு. கு. சச்சிதானந்த குருக்கள், சிவஸ்ரீ மு. கு. அமிர்தலிங்க குருக்கள்,சிவஸ்ரீ மு. கு. சபாரெத்தினக் குருக்கள், ஆலய குரு சிவஸ்ரீ வ. சோதிலிங்க குருக்கள் ஆகியோரது ஆசியோடு நிகழ்வு ஆலய கருவறையில் ஆரம்பமானது.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் வண்ணக்கர் இ. மேகராசா தலைமையிலான வண்ணக்குமார் பரிபாலன சபை குழுவினர் மற்றும் பொதுமக்கள் இந்த அடிக்கல் நடும் விழாவில் கலந்து கொண்டனர்.

ஆலயம் தற்சமயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



தமிழகத்தின் புகழ்பெற்ற PSR SILK SAREES நிறுவனத்தின் ஆதரவுடன்

## இலங்கை யாழ்ப்பாணத்தில் இரு இடங்களில்

# மணிமேகலைப் பிரசுரத்தின் புத்தகக் கண்காட்சி!

28.08.25 வியாழன் காலை 11.30 மணிக்கு
யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கேட்போர் கூடம்

30.08.2025, சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு
யாழ்ப்பாணம் பொது நூலகத்தின் மாநாட்டு மண்டபத்தில்

இலங்கையில் ரவி தமிழ்வாணனின்
தொடர்பு கைபேசி : 0094 743 171 971
வாட்ஸ் அப்: 98415 44187

இந்த இனிய புத்தக கண்காட்சிக்கு சுற்றமும் நட்புமாக கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கும்

முனைவர் **ரவி தமிழ்வாணன்**
நிர்வாக இயக்குநர், மணிமேகலைப் பிரசுரம்



**மணிமேகலைப் பிரசுரம்**
எண் 21, தணிகாசலம் சாலை,
தியாகராய நகர், சென்னை-600 017.
தொலைபேசி: 044-24342926, 24346082, 91764 51934
மின் அஞ்சல்: manimekalaiprasuram@gmail.com
இணையதளம்: www.tamilvanan.com

1

28.08.25 வியாழன் காலை 11.30 மணிக்கு
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் கேட்போர் கூடத்தில்
புத்தக வெளியீட்டு விழாவும்! புத்தகக் கண்காட்சியும்!!

நிகழ்ச்சி நிரல்

தமிழ்த்தாய் வாழ்த்து

வரவேற்புரை: முனைவர் திரு. ரவி தமிழ்வாணன்
நிர்வாக இயக்குநர், மணிமேகலைப் பிரசுரம், சென்னை-17

தலைமை: திரு. சற்குண ராஜா
துணைவேந்தர், யாழ் பல்கலைக்கழகம்

சிறப்புரை: திரு. சாய் முரளி
இந்தியத் துணைத் தூதர், யாழ்ப்பாணம்

முன்னிலை: திரு. சிவா
தமிழ்ப் பற்றாளர், சியாட்டில் நகரம், அமெரிக்கா

திரு. சௌந்திரராஜ்
புத்தக நேசர், வாசகர், பாண்டிச்சேரி

வாழ்த்துரை: திரு. சரவணபவன்
மேனாள் எம்.பி. உதயன் நாளிதழ் நிறுவனர்

திரு. கீர்த்திசிங்கம்
லண்டன் எழுத்தாளர், அச்சுவேலி

ஞானச்சிற்பி மாஸ்டர் திரு. சஹாநாதன்
சிறந்த எழுத்தாளர், சென்னை

திரு. மகேந்திரன் ஜதீஸ்
எழுத்தாளர், யாழ்ப்பாணம்

கண்காட்சி ஏற்பாட்டில் உதவி
திரு. முகுந்தன்
திரு. நிவாஸ்

3

30.08.2025 சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு
யாழ்ப்பாணம் பொது நூலகத்தின் மாநாட்டு மண்டபத்தில்
மணிமேகலை பிரசுரம் புத்தக விற்பனை கண்காட்சி

நிகழ்ச்சி நிரல்

தமிழ்த்தாய் வாழ்த்து

வரவேற்புரை
முனைவர் திரு. ரவி தமிழ்வாணன்
நிர்வாக இயக்குநர், மணிமேகலைப் பிரசுரம், சென்னை

கண்காட்சியைத் திறந்து வைத்து சிறப்புரை
மதிப்பிற்குரிய திரு. சாய் முரளி அவர்கள்
இந்தியத் துணைத் தூதர், யாழ்ப்பாணம்

முன்னிலை
திரு. சௌந்திரராஜ்
புத்தக நேசர், வாசகர், பாண்டிச்சேரி

வாழ்த்துரை
திரு. வித்யாதரன்
ஆசிரியர், காலை முரசு

திரு. மகேந்திரன் ஜதீஸ்
எழுத்தாளர், யாழ்ப்பாணம்

5



# கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தால் வசதி குறைந்த மக்களுக்கு இலவசமாகப் பசு வழங்கல்!

(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம், சமுதாயத்தில் மிகவும் வசதி குறைந்த குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவியாக, ஆலயத்திறதுக்கு நேர்த்தியாக கிடைக்கும் பசு மாடுகளைக் கட்டம் கட்டமாக இலவசமாக வழங்கி வருகிறது.

குடும்பத்துக்கு ஒரு பசு வழங்கும் வேலைத் திட்டத்துக்கு அமைவாக நான்காம் கட்டமாக அந்தப் பகுதியில் இருந்து பிரதேச செயலாளர்கள் ஊடாக தெரிவு செய்யப்பட்ட ஆறு பயனாளிகளுக்கும் பசு வழங்கி வைக்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை ஆலய முன்றலில் இடம் பெற்றது.

நிகழ்வில் தான்தோன்றீஸ்வரர் ஆலய தலைவர் இ.மேகராசா, செயலாளர் பொருளாளர், தேச மகாசபை உறுப்பினர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



# இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் ஆலய அலங்காரத் திருவிழா நாளை ஆரம்பம்

பளை, இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் கோவில் அலங்காரத் திருவிழா நாளை (28) ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும்.

ஓகஸ்ட் 31ஆம் திகதி வெண்ணெய் திருடுதல் திருவிழாவும் செப்ரெம்பர் முதலாம் திகதி துகில் திருவிழா இரண்டாம் திகதி சர்ப்பத் திருவிழா மூன்றாம் திகதி மகா கம்சன் போர் திருவிழா நான்காம் திகதி வேட்டைத் திருவிழா ஐந்தாம் திகதி சப்பை ரதத் திருவிழா என்பன இடம்பெறும்.

ஆறாம் திகதி தேர்த் திருவிழாவும் ஏழாம் திகதி சமுத்திர தீர்த்தத் திருவிழா எட்டாம் திகதி மல்வில் தாமரைத் தடாகத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

திருவிழா கிரியைகள் பிரம்மஸ்ரீ வித்தியானந்தக் குருக்கள் தலைமையில் நடைபெறும்.

சமுத்திர தீர்த்தத் திருவிழாவுக்கு கோவிலிலிருந்து புறப்பட்டு புளியடி, புதுக்காடு, மாசார் மருதடிப் பிள்ளையார், வத்திராயிருப்பு, உடுத்துறை, ஊடாக கொடுக்கிளாய் சமுத்திரத்தில் தீர்த்தமாடிய பின்னர் அங்கிருந்து புறப்பட்டு ஆழியவளை, கொற்றார்குளம், சின்ன மண்டலாய், இயக்கச்சி ஊடாக ஆலயத்தை வந்தடையும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.





# முஸ்லிம் காங்கிரஸை பலப்படுத்தும் செயற்பாடு சாய்ந்தமருதில் முன்னெடுப்பு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

சாய்ந்தமருது பிரதேசத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை பலப்படுத்துவது தொடர்பிலான கலந்துரையாடல் ஞாயிற்றுக்கிழமை கல்முனை மாநகர முன்னாள் முதல்வரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சர்வதேச விவகார பணிப்பாளருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப் தலைமையில் அவரது இல்ல வளாகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட செயற்குழு செயலாளர் ஏ.சி. சமால்டீன் உட்பட கட்சியின் சாய்ந்தமருது பிரதேச வட்டார அமைப்பாளர்கள், சிரேஷ்ட உறுப்பினர்கள், இளைஞர்கள் மற்றும் பெண்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை சாய்ந்தமருது பிரதேசத்தில் துரித கதியில் கட்டியெழுப்புவதற்கான வேலைத் திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதற்காகக் கட்சிப் பிரமுகர்களும் வட்டார அமைப்பாளர்களும் கட்சிப் போராளிகளும் முரண்பாடுகள் எதுவுமின்றி ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும் என்றும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.



# வடக்கு புதிய கடற்படைத் தளபதி யாழ். அரச அதிபருடன் சந்திப்பு!

வட மாகாணக் கடற்படைத் தளபதியாகப் புதிதாகப் பொறுப்பேற்ற ரியர் அட்மிரல் புடிக்ஹ லியனகமகே யாழ். மாவட்ட அரச. அதிபர் மருதலிங்கம் பிரதீபனை நேற்று (26) மரியாதை நிமித்தம் அரச அதிபர் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

சந்திப்பில் மேலதிக அரச அதிபர் . க. சிவகரன், மேலதிக அரச அதிபர் (காணி) பா.ஜெயகரன், பிரதம கணக்காளர் எஸ்.கிருபாகரன், திட்டமிடல் பணிப்பாளர் இ சுரேந்திரநாதன் மற்றும் உதவி மாவட்டச் செயலாளர் செல்வி உ.தர்சினி ஆகியோரும் கலந்து கொண்டனர்.





# உணவுப் பாதுகாப்பு விதிமுறைகளை மீறிய ஆறு உணவகங்களுக்குத் தண்டம் விதிப்பு

பூநகரியில் உணவுப் பாதுகாப்பு விதிமுறைகளை மீறிய ஆறு உணவகங்களுக்கு கிளிநொச்சி நீதிமன்றில் ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் உணவுப் பாதுகாப்பு விதிமுறைகளைப் பேணாது இயங்கிய ஆறு உணவு கையாளும் நிலையங்களுக்கு எதிராக கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

பூநகரி மேற்பார்வை பொது சுகாதர பரிசோதகர் ஜென்சன் றொனால்ட்டின் வழிகாட்டலில் பிரிவுகளுக்குப் பொறுப்பான பொது சுகாதாரப் பரிசோதகர்கள் இணைந்து அண்மையில் பூநகரி மற்றும் முழங்காவில் பகுதியில் உணவுப் பாதுகாப்பு பரிசோதனைகளில் ஈடுபட்டனர்.

இதன்போது மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற விதத்தில் களஞ்சியப் படுத்தப்பட்ட பெருமளவான உணவுப் பொருள்கள் கைப்பற்றி அழிக்கப்பட்டன. உணவுப் பாதுகாப்புக்கு ஊறு விளைவிக்கும் செயற்பாடுகளும் இனங் காணப்பட்டன. இதில் ஆறு உணவு கையாளும் நிறுவனங்களுக்கு எதிராக இருபத்தைந்து குற்றச்சாட்டுக்கள் நீதிமன்றில் முன்வைக்கப்பட்டன.

இவை நீதிமன்றால் குற்றமாக உறுதிப் படுத்தியமையை அடுத்து ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா தண்டப் பணமாக அறவிடப்பட்டது.





# தகவல் தொழில்நுட்பத்தின் சூழலில் "நவீன குற்றங்கள்"!

இன்றைய நவீன தொழில்நுட்ப உலகில் இணையத்தின் ஆதிக்கம் உலகளவில் வியாபித்துக் காணப்படுகின்றது. இதன் காரணமாகப் பல நன்மையான விடயங்கள் மேற்கொள்ளப்பட்டாலும் கூட அதே அளவுக்குப் பல தீமையான விடயங்களும் இடம்பெற்று கொண்டிருக்கின்றன. இன்றைய காலகட்டத்தைப் பொறுத்தவரையில் இணையமானது கல்வி, தகவல் பரிமாற்றம், பொழுதுபோக்கு, மிக முக்கியமாக வணிக நடவடிக்கைகள், தொலைத் தொடர்பு போன்ற அன்றாட தேவைகளுக்காக பல மில்லியன் மக்கள் பயன்படுத்தப்படுவது அனைவரும் அறிந்த விடயமே. இந்தச் சந்தர்ப்பத்தில் எம்மையும் எம்மைச் சுற்றியுள்ளவரையும் இவ்வாறான இணைய செயற்பாடுகளில் இருந்து பாதுகாத்துக் கொள்வது அனைவரதும் பொறுப்பாகும்.

**இணையப் பாதுகாப்பு என்பது?**

இணையப் பாதுகாப்பு என்பது இணையம் மற்றும் அதன் அடிப்படையிலான மென்பொருள்கள் மற்றும் சேவைகள், தரவுகளை பாதுகாக்கும் முயற்சிகளைக் குறித்து நிற்கின்றது. இதனை வன்பொருள் (Hard ware) பாதுகாப்பு மற்றும் மென்பொருள் (Soft ware) பாதுகாப்பு என்ற வகையில் பிரித்துப் பார்க்க முடியும். இது கணினி தொழில்நுட்பம் உட்பட அது சார்ந்து வரும் தொழில் நுட்ப ரீதியான பின்னணியில் அமைந்துள்ள விடயமாகும். இதில் தொழில்நுட்ப ரீதியான அறிவு கட்டமைப்பு என்பது அவசியமான ஒரு காரணி எனலாம். இவ்வாறான பின்னணியில் இதனை நிகழ்நிலைத் தளங்கள் வாயிலாக எமது அன்றாட செயல்பாடுகளை மேற்கொள்ளும் போதும் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதும் இங்கு அவதானிக்க தக்க விடயமாகும்.

இவ்வாறான பின்னணியில் இணைய நிகழ்நிலைப் பயனாளர்கள் என்ற அடிப்படையில் வயது வேறுபாடு இன்றி அனைவரினதும் பாதுகாப்பு அவரவர் உறுதிப்படுத்த வேண்டியது இன்றியமையாத விடயமாக இன்றைய நவீன காலத்தில் காணப்படுகின்றது. இன்றைய காலகட்டத்தில் இணைய பாதுகாப்பின் அவசியத்தை எடுத்து நோக்கினால், இன்றியமையாத ஒரு விடயமாக இணையம் மாறியுள்ள காரணத்தால் முன்னைய காலங்களில் நாம் சிந்திக்காத அளவுக்கு எமது பெரும்பாலான நடவடிக்கை இணையத்தின் துணையுடனே இடம்பெறுகின்றன. இது எமது பணிகளை இலகுபடுத்துவதற்காகவும் எமது தகவல் பகிர்வு பணப்பரிமாற்றம் கல்வி தொழில் வாய்ப்புகள் மற்றும் வணிக செயற்பாடுகள் போன்ற செயற்பாடுகளுக்கு இணையம் முக்கியமாக பயன்படுத்தப்படுகிறது. எனவே இந்த நல்ல விடயங்களைப் போலவே தீய விடயங்களும் உள்ளன. ஒரு பாதையில் பயணிக்கும் போது நாம் எதிர் கொள்ள வேண்டிய சவால்களும் இங்கே ஏராளம். இதன் பின்னணியில் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை செயற்படுத்தாமல் இணையத்தில் உலா வருவதும் ஆபத்தானதாகவே அமையும். பாதுகாப்பு தொடர்பான தெளிவு பெற்றிருப்பது முக்கியமானது போலியான தகவல்கள், தனிப்பட்ட தகவல் திருட்டு, நிதி மோசடிகள் குற்றச்செயல்கள் என்பவற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ள இணைய பாதுகாப்பு அவசியமாகும்.

**இணைய அச்சுறுத்தல்கள் ?**

இந்த வகையில் இணைய அச்சுறுத்தல்கள் பல காணப்படுகின்றன. Malware, Pishing, Ransom ware,DDoS தாக்குதல்கள், அடையாளத் திருட்டு போன்ற தொழில் நுட்ப பதங்கள் ஊடாக அவற்றை அடையாளம் காண முடிகிறது. எமது சாதனங்களில் காணப்படும் தரவுகளை அழித்தல், தனிப்பட்ட தரவுகளை திருடுதல், பணம் பெறல், இணைய சேவைகளை தடுத்தல் மற்றும் அடையாள மோசடி என்பன பிரபல அச்சுறுத்தல்களாகவும் காணமுடிகிறது. எனவே பொதுவாக இணைய பயனர்கள் என்ற வகையில் இவ்வாறான அச்சுறுத்தல் தொடர்பாக அறிந்திருப்பது அவசியம் எனலாம்.

**இணையப் பாதுகாப்பு உத்திகள் ?**

இதன்போது குறைந்த அளவு ஏனையவர்களால் ஊகிக்க முடியாத அளவு எமது கடவுச் சொற்களை நாங்கள் பாதுகாப்பாக உறுதிபட வைத்துக் கொள்வது சிறந்த விடயமாகும். உதாரணமாக, எமது கடவு சொற்களை எமது அனைத்து விதமான சமூக ஊடக கணக்கு மற்றும் மின்னஞ்சல் கணக்கு என நாங்கள் பயன்படுத்தும் அனைத்து தளங்கள் செயலிகளுக்கும் ஒரே விதமான கடவுச் சொற்களை பயன்படுத்துவது தவறான விடயமாகும். வெவ்வேறு கடவுச்சொற்களைப் பயன்படுத்துவது பாதுகாப்பை உறுதி செய்வதற்குச் சமமாகும்.

I am a @student = Iaa@s
I go to @Trincomalee = igt@T
I was born @4th April 2001 = iwb@4A2

தொடர்ச்சி▼

# தகவல் தொழில்நுட்பத்தின் சூழலில் "நவீன குற்றங்கள்"!

**தொடர்ச்சி▲**

இவ்வாறாக எமது கடவுச்சொற்களை நாங்கள் சாதுரியமாக அமைத்துக் கொள்ள முடியும்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் மோசடி முகவரிகள் மற்றும் மோசடி தளங்கள் என்பவற்றை நாங்கள் அடையாளம் காண்பது அவசியம் எனலாம். அந்த வகையில் முகவரியின் யூ ஆர் எல் (URL) சரியானதா என உறுதி செய்து கொள்ள மற்றும் மின்னஞ்சல் முகவரியோ இணையதள முகவரியை தவறான அல்லது சந்தேகமானது எனில் அது மோசடியானது என கருத முடியும்.

மேலும் குறிப்பிடுகையில் உண்மையான படங்கள் மற்றும் போலியான அதன் லோகோக்கள் (Logos) என்பனவற்றை நாங்கள் ஒப்பிடுவதன் மூலம் (Fact Checking) அடையாளம் காண முடியும். இவ்வாறான சந்தர்ப்பத்தில் சந்தேகத்திற்கு இடமாக இருந்தால் அவை தொடர்பிலும் அவதானமாக இருக்க வேண்டும். சந்தேகமாக இருந்தால் சம்பந்தப்பட்ட நபர்களை அல்லது நிறுவனங்களை நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டு உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும். மின்னஞ்சல் முகவரியில் எழுத்துப் பிழைகள் இருக்கும் ஆனால் அவை மோசடி நடவடிக்கையாக இருக்க வாய்ப்புகளும் அதிகமாக காணப்படுகின்றன.

அத்தோடு நாங்கள் கணக்குகளை பயன்படுத்தும் போது அல்லது உள் நுழையும் போது (2FA) Two-factor authentication மற்றும் "Multi-Factor Authentication (MFA)" பாதுகாப்பு வழிமுறையினை பயன்படுத்திக் கொள்வது அவசியம் எனலாம். ஏனெனில் இது கணக்குகளுக்கு கூடுதல் பாதுகாப்பை வழங்குகிறது.


இதில் கடவுச் சொற்களை செலுத்திய பின்னர் மீண்டும் பயனரை உறுதி செய்வதற்கான மேலதிக பாதுகாப்பு நடவடிக்கையை கொண்டுள்ளது. கடவுச் சொற்களை யாராவது அறிந்து கொண்டாலும் கணக் குகளுக்குள் ஊடுருவதற்கான சந்தர்ப்பத்தை இரண்டாவது படிநிலை தடுக்கின்றது.

கையடக்க தொலைபேசிக்கு அல்லது எமது மின்னஞ்சல் முகவரியில் இதனை செயல்படுத்திக் கொள்ள முடியும். இதன்போது எமது கையடக்கத் தொலைபேசி அல்லது எமது ஏனைய கணக்குகளுக்குள் நுழையும் போது எமக்கான இரகசிய இலக்கம் அனுப்பப்பட்டு உள் நுழைவது உறுதிப்படுத்தப்படும். இதனால் கணக்குகள் திருடப்படுவது தவிர்க்கப்படுகிறது.

இவ்வாறான பின்னணியில் முறையான பாதுகாப் பின்மையால் கடந்த 2023 மற்றும் தற்போதைய காலங்களில் சுமார் 20,000 மேற்பட்ட முறைப்பாடுகள் ஆண்டு தோறும் ஒப்பீட்டளவில் இவ்வாறான மோசடிகள் அதிகரித்துக் கொண்டே வருகின்றது.

### இணையப் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வை அதிகரிப்பது எவ்வாறு?

இவ்வாறான பின்னணியில் எமது தனிப்பட்ட தகவல்களை நாம் பகிரும் போது அல்லது வெளிப்படுத் தும்போது பல்வேறு விடயங்களை கவனத்தில் கொள்வது அவசியம் எனலாம். அந்த வகையில் கணினி ஊடாக மேற்கொள்ளப்படும் சேவைகள் அந்த தகவல்களை சேகரிப்பதற்கு காத்திருக்கின்றன. தொலைபேசி இலக்கம் எமது புகைப்படம் எமது பிறந்த திகதி எமது வங்கித் தகவல்கள் என்பவற்றை உதாரணமாக குறிப்பிடலாம். அதே நேரம் சமூக ஊடக நிறுவனங்கள் அவை வர்த்தக நோக்கங்களுக்கு செயல்படுவது தற்காலப் போக்காக



அமைகிறது. எமது தனிப்பட்ட கணக்குகளுக்கு வர்த்தக நோக்கங்களுக்காக பல்வேறு தனிப்பட்ட தகவல்கள் என்பன எமது கண்களுக்கு புலப்படாத வகையில் திருடப்படுகின்றது.

இதனால் எமது தகவல்கள் மூன்றாம் தரப்பினருக்கு கிடைக்கக்கூடிய வாய்ப்புகள் உள்ளன. இணையதளங் களில் செயலிகளில் எமது தரவுகளை பாவிக்கும் விதம் சேமித்து வைத்துக் கொள்ளும் காலம் உள்ளிட்ட விபரங்கள் உள்ளடங்கிய தனி உரிமைக் கொள்கை எனும் விடயம் உள்ளது. இணைய சேவைகளை பெற்றுக் கொள்ளும் போது தனியுரிமைக் கொள்கையை வகித்து அந்த சேவைகளை பயன்படுத்துவதா? இல்லையா? என்ற தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

இவ்வாறான பின்னணியில் எமது சமூகத்தில் எம்மைச் சுற்றியுள்ள அனைவரின் பாதுகாப்புக் கருதி இணைய பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வினை அதிகரிக்க பயனர்களுக்கு அது தொடர்பான தெளிவூட் டல்களை வழங்குவது அவசியம் எனலாம். அனைவரும் இலகுவாக அறிந்து கொள்ளக்கூடிய வகையில் பாதுகாப்பு தொடர்பில் எப்பொழுதும் ஞாபகப்படுத்திக் கொண்டிருப்பது முக்கியமானது. எம்மை சுற்றியுள்ள பாடசாலை சமூகத்தினர் பல்கலைக்கழக சமூகத்தினர் மற்றும் அறிவார்ந்த தொழில் புரியும் சமூகத்தினர் ஆகியோரை இலக்காக வைத்து இவ்வாறான இணைய விழிப்புணர்வுகளை கட்டாயப்படுத்தி மேற்கொள்வது சமூகத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் எனலாம்.

இவ்வாறான பின்புலத்தில் எமது அறிவார்ந்த சமூகத் தில் இணைய பாதுகாப்பு ஏன் அவசியம் என்பதை காண முடிகின்றது. அந்த வகையில் இணைய மோசடி யில் இருந்து ஒருவர் தன்னை ஒதுக்கி விட முடியாத அளவுக்கு இணைய பயன்பாடு அதிகளவாக காணப்படுகின்றது.

எனவே இவ்வாறான சிக்கல்களில் இருந்து தற்காத்துக் கொள்ளும் வழிமுறைகளையும் நடைமுறைகளையும் அறிந்திருப்பது எமது டிஜிட்டல் யுகத்தில் எமது டிஜிட்டல் நிகழ்நிலைத் தளத்திலான எமது உரிமைகளையும் எமது பாதுகாப்பையும் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

**நாகராசா தனுஸ்காந்,**
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



# விஜயின் கருத்துகளை ஏற்றுக்கொள்ள முடியாது

## ஓ.பன்னீர்செல்வம் தெரிவிப்பு



அண்மையில் மதுரையில் இடம்பெற்ற தமிழக வெற்றிக் கழக மாநாட்டில் விஜய் பேசிய ஒரு சில கருத்துகள் ஏற்றுக் கொள்ள கூடியதாக இல்லை என முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

சேலத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மாநாட்டில் விஜய் பேசிய ஒரு சில கருத்துகள் ஏற்று கொள்ள கூடியதாக இல்லை. அந்த மாநாட்டில் அரசியல் ரீதியாக ஈர்க்கும் கருத்துகள் இல்லை. அ.தி.மு.க. ஒன்று சேர்ந்து போட்டியிட்டால் வருகிற சட்டமன்ற தேர்தலில் வெற்றி பெறலாம்.

எனக்கு எந்த ஆசையும் இல்லை. அரசியலில் உச்சபட்ச பதவியான முதலமைச்சர் பதவியை 3 முறை ஜெயலலிதா வழங்கி உள்ளார். 13 ஆண்டுகள் பொருளாளராக இருந்தேன். இன்று வரை அ.தி.மு.க. தொண்டனாக இருக்கிறேன். ஜெயலலிதா கூறியபடி 100 ஆண்டுகள் அ.தி.மு.க. ஆட்சிக்கு வரவேண்டும். தேர்தலுக்கு இன்னும் 9 மாதம் இருக்கிறது.

அதற்குள் பல சூழ்நிலைகள் மாறும். அ.தி.மு.க. கட்சியின் சட்ட விதிகள் கேலிக் கூத்தாக இருக்கிறது. அ.தி.மு.க.வை யாரும் பிளவுபடுத்த முடியாது. கடந்த நாலரை ஆண்டு தி.மு.க. அரசின் செயல்பாடுகள், தவறுகளை சுட்டிக் காட்டி வருகிறேன். தமிழகத்தில் அ.தி.மு.க. தான் ஆட்சி செய்ய வேண்டும் என்ற சூழ்நிலை ஏற்படும்." என்றார்.

# த.வெ.க. மாநாட்டில் தூக்கி வீசப்பட்டு காயம் விஜய் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்

## இளைஞர் முறைப்பாடு



மதுரை த.வெ.க. மாநாட்டில் பவுன்சர்களால் கீழே தூக்கி வீசப்பட்ட இளைஞர், பெரம்பலூர் பொலிஸ் நிலையத்தில் நடிகர் விஜய் மற்றும் அவரது பாதுகாவலர்கள் மீது புகார் அளித்துள்ளார்.

மதுரை மாவட்டம் பாரபத்தியில் கடந்த 21 ஆம் திகதி த.வெ.கவின் 2 ஆவது மாநாடு நடைபெற்றது.

இந்த மாநாட்டு மேடையில் நடிகர் விஜய் வலம் வந்தபோது, அங்கு நின்ற இளைஞர் ஒருவரை பாதுகாவலர்கள் கீழே தூக்கி வீசினர். இதில், அந்த இளைஞருக்கு காயம் ஏற்பட்டது. அவருக்கு விஜய் எந்த ஆறுதலும் கூறவில்லை. அந்த இளைஞர் குறித்த தகவல் சமூக வலைதளங்களில் வைரலாகியது.

இந்நிலையில், அந்த இளைஞர் பெரம்பலூர் மாவட்டம் குன்னம் வட்டம் மூங்கில்பாடியை அடுத்த பெரியம்மாபாளையம் சப்பாணி தெருவைச் சேர்ந்த சரத்குமார் (வயது 26) என்பது தெரிய வந்தது. அவர் நேற்று பெரம்பலூர் மாவட்ட எஸ்.பி. அலுவலகத்துக்கு தனது தாயுடன் வந்து, த.வெ.க. தலைவர் விஜய், அவரது பாதுகாவலர்கள் மீது புகார் மனு அளித்தார்.

அதில், மதுரை த.வெ.க. மாநாட்டில் நடிகர் விஜய் நடந்து வந்த பாதை அருகே நின்றுகொண்டிருந்த நான், அவரை பார்த்த மகிழ்ச்சியில் நடைபாதையில் ஏறினேன். அப்போது, விஜய் பாதுகாவலர்கள் என்னை நடைபாதை மேடையில் இருந்து குண்டுக்கட்டாக தூக்கி கீழே வீசினர். இதில், எனது மார்பு, தோள்பட்டை, விலா எலும்பில் படுகாயம் ஏற்பட்டது.

இதற்காக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறேன். மாநாட்டில் நடந்த சம்பவத்தை வெளியே கூறவிடாமல் தடுத்தார்களே தவிர, உடல் நலம் குறித்து விசாரிக்கவில்லை. இந்த விவகாரம் தொடர்பாக விஜய் மற்றும் அவரது பாதுகாவலர்கள் மீது போலீஸார் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.



## ஐ.டி. ஊழியர் மீது தாக்குதல்:

# நடிகை லட்சுமி மேனனுக்கு பொலிஸார் தீவிர வலைவீச்சு

கொச்சியில் ஐ.டி ஊழியரை கடத்தி தாக்கியதாக நடிகை லட்சுமி மேனன் மற்றும் மூன்று பேர் மீது எர்ணாகுளம் வடக்கு பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். தற்போது தலைமறைவாக உள்ள லட்சுமி மேனனை கைது செய்ய பொலிஸார் தீவிர தேடுதல் வேட்டையில் இறங்கியுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு 11 மணியளவில் கொச்சியில் உள்ள ஒரு பாரில் லட்சுமி மேனன் தரப்புக்கும், ஆலுவாவைச் சேர்ந்த ஐ.டி. ஊழியர் தரப்புக்கும் இடையே தகராறு ஏற்பட்டது.

இதனையடுத்து அன்று இரவு எர்ணாகுளம் வடக்கு ரயில்வே மேம்பாலத்தில், லட்சுமி மேனனுடன் வந்தவர்கள் ஐ.டி ஊழியரை கடத்திச் சென்று தாக்குதல் நடத்தினர் என புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடத்தப்பட்டு தாக்கப்பட்ட ஆலுவாவைச் சேர்ந்த ஐ.டி ஊழியர் அளித்த புகாரின் அடிப்படையில், லட்சுமி மேனன் மற்றும் 3 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. குற்றம் சாட்டப்பட்ட மிதுன், அனீஷ் மற்றும் சோனமோல் ஆகிய மூன்று பேர் ஏற்கனவே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ள நடிகை லட்சுமி மேனனின் ‘செல்போன் சுவிட்ச் ஓஃப்’ செய்யப்பட்டுள்ளது. தற்போது தலைமறைவாக உள்ள லட்சுமி மேனனை கைது செய்ய பொலிஸார் தீவிர தேடுதல் வேட்டையில் இறங்கியுள்ளனர்.

இதுகுறித்து எர்ணாகுளம் வடக்கு பொலிஸார் தெரிவிக்கையில்,

“நடிகை மற்றும் மூன்று பேர், ஐ.டி ஊழியர் மற்றும் நண்பர்களின் காரைப் பின்தொடர்ந்து பாலத்தில் அவர்களைத் தடுத்து நிறுத்தினர். அங்கு அவர்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டது. இதனையடுத்து அவர்கள் ஐ.டி ஊழியரை வலுக்கட்டாயமாக தங்கள் காரில் இழுத்து வேகமாக ஏற்றினர். இதனையடுத்து பரவூரில் உள்ள வெடிமாரா சந்திப்பில் இறக்கிவிடப்படும் வரை அவர்கள் ஐ.டி ஊழியரை காரில் வைத்து கடுமையாக தாக்கினர்” என்று தெரிவித்தனர்.



# அமுலுக்கு வந்த இந்தியா மீதான டொனால்ட் ட்ரம்பின் 50 வீத வரி



ரஷ்ய எண்ணெய் கொள்வனவில் இருந்து பின்வாங்க புது டில்லி மறுத்ததைத் தொடர்ந்து, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் இந்தியப் பொருள்கள் மீதான 25 சதவீத கூடுதல் வரிகள் இன்று அமுலுக்கு வந்தன.

இது இந்தியப் பொருள்கள் மீதான ஏற்றுமதி வரியை மொத்தமாக 50 சதவீதமாக உயர்த்தியது.

அதிக வரிகள் பல்வேறு துறைகளில் ஏற்றுமதியாளர்களை பாதிக்கும் என்றும், வளர்ச்சி வாய்ப்புகளை குறைக்கக்கூடும் என்றும் ஆய்வாளர்கள் எச்சரித்தனர்.

அமெரிக்க வரிகள் 60.2 பில்லியன் டொலர் மதிப்புள்ள இந்திய ஏற்றுமதியை பாதிக்கும்.

ஆடை, இரத்தினக் கற்கள், நகைகள், இறால், கம்பளங்கள் மற்றும் தளபாடங்கள் உள்ளிட்ட தொழிலாளர் சார்ந்த துறைகளில் ஏற்றுமதி 70 வீதம் வரை குறையக்கூடும்.

இது மில்லியன் கணக்கான தொழிலாளர்களைப் பாதிக்கும் என்று உலகளாவிய வர்த்தக ஆராய்ச்சி முன்முயற்சி (புவுசுஐ) தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இந்த வரிகள், அமெரிக்காவிற்கான இந்தியாவின் ஏற்றுமதியில் சுமார் 66 சதவீதத்தை உள்ளடக்கியது, இது 2025 நிதியாண்டில் 86.5 பில்லியன் டொலர் மதிப்புடையது.

வரிகள் தொடர்ந்தால், அடுத்த ஆண்டு ஏற்றுமதிகள் 49.6 பில்லியன் டொலர்களாக குறையக்கூடும்.

சீனா, வியட்நாம் மற்றும் மெக்சிகோ போன்ற போட்டியாளர்கள் அமெரிக்க சந்தையில் உள்ள இடைவெளியைப் பயன்படுத்திக் கொள்ள வாய்ப்புள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனவரியில் வெள்ளை மாளிகையில் மீண்டும் நுழைந்ததிலிருந்து, உலகின் பெரும்பாலான பகுதிகளிலிருந்து வரும் பொருள்களுக்கான அமெரிக்க வரிகளை அமெரிக்க ஜனாதிபதி கணிசமாக அதிகரித்துள்ளார்.

இது நட்பு நாடுகள் மற்றும் போட்டியாளர்களின் பொருளாதாரங்களுடனான உறவுகளை மோசமாக்குகிறது மற்றும் அதிக பணவீக்கம் குறித்த அச்சங்களைத் தூண்டுகிறது.

# உக்ரைனின் தொழில்துறைக்குள் பிரவேசித்தது ரஷ்ய இராணுவம்



உக்ரைன் – ரஷ்யா போரின் புதிய நடவடிக்கையாக முக்கிய தொழில் மூலோபாய நகரான டினிப்ரோபெட்ரோவ்ஸ்க் நகரில் ரஷ்ய படைகள் முன்னேறி தங்கள் தளங்களை உருவாக்க முயற்சித்து வருவதாக உக்ரைனிய படைகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இந்த பகுதியில் ஜுன் மாதம் தாக்குதலை தொடங்கிய ரஷ்ய படைகள் குறுகிய காலத்திலேயே நகரை கைப்பற்றி விட்டதாக அறிவித்து இருந்தது.

ஆனால், தற்போது தான் டினிப்ரோபெட்ரோவ்ஸ்க் பிராந்தியத்திற்குள் ரஷ்ய படைகள் நுழைந்து இருப்பதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

உக்ரைனிய படைப்பிரிவை சேர்ந்த அதிகாரி விக்டர் ட்ரெகுபோவ் தெரிவித்த தகவலில், டினிப்ரோபெட்ரோவ்ஸ்க் நகர் மீது நடத்தப்பட்ட முதல் பெரிய தாக்குதல் இது என கூறியுள்ளார்.

மேலும் டினிப்ரோபெட்ரோவ்ஸ்க் நகருக்குள் ரஷ்ய படைகள் நுழைந்து இருந்தாலும், அவற்றின் முன்னேற்றம் தொடர்ந்து தடுக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க் கிழமை டினிப்ரோபெட்ரோவ்ஸ்க்-வின் உட்புற எல்லையில் அமைந்துள்ள சபோரிஸ்கே மற்றும் நோவோஹ்ரிகோரிவ்கா ஆகிய கிராமங்களை கைப்பற்றி விட்டதாக ரஷ்ய படைகள் தெரிவித்துள்ளன.


ஒருவேளை, டினிப்ரோபெட்ரோவ்ஸ்க் நகரம் முழுவதுமாக ரஷ்ய படைகளின் கைகளுக்கு சென்றுவிட்டால் அது உக்ரைனுக்கு மிகப்பெரிய இழப்பாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

பக்கங்கள் - 03

கனடா முரசு

புதன்கிழமை 27/08/2025

## கனடாவில் உணவு விலைகள் குறையும் சாத்தியம் இல்லை



C2 ▶



# கனடாவுக்கு கல்வி கற்கச் செல்லும் வெளிநாட்டு மாணவர்களில் வீழ்ச்சி

கனடா அரசு வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தும் நோக்கில் பல்வேறு கட்டுப்பாடுளை விதித்து வந்தது.

இதன் விளைவாக, 2024 ஆம் ஆண்டில் கனடாவுக்கு கல்வி கற்க விண்ணப்பித்த மாணவர்களின் எண்ணிக்கை 35 வீதம் குறைந்தது. மேலும், 2025 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 10 வீதம் மேலும் குறைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகள், வீட்டு வாடகை பற்றாக்குறை மற்றும் மருத்துவ சேவைகளில் ஏற்பட்ட தாமதம் போன்ற பிரச்சினைகளுக்கு வெளிநாட்டு மாணவர்கள் காரணமாக இருப்பதாகக் கருதப்படும் சூழலில் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம், வீட்டு வாடகைகளில் போட்டியும், வாடகை விலைகளில் குறைவு ஏற்பட்டுள்ளது.

கனடாஎதிர்பார்த்ததுபோலவே,வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது.

எனினும், வெளிநாட்டு மாணவர்கள் உள்நாட்டு மாணவர்களை விட அதிக கல்விக்கட்டணம் செலுத்துவதாகக் கருதப் படுகின்றது.

C2 ▶

# டொரொன்டோவில் இடம்பெறும் மோசடி தொடர்பில் எச்சரிக்கை



கனடாவின், டொரொன்டோவில் இடம்பெறும் மோசடி சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

டொரொன்டோவில் இ-ட்ரான்ஸ் ஃபர் மோசடி குறித்து பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. புலனாய்வாளர்களின் கூற்றுப்படி, மோசடி செய்பவர்கள்

C2 ▶



# கனடா கோர விபத்தில் ஒருவர் பலி; இருவர் காயம்!

கனடாவின் நோவா ஸ்கோஷியா, என்ஃபீல்டில் இடம்பெற்ற சாலை விபத்தில் ஒருவர் உயிரிழந்ததோடு, இருவர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த இருவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. ஹைவே 102 வீதிப் பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சியாரா ரக பிக்கப் வண்டியொன்று தடுப்பை கடந்து பறந்து, எதிரே வந்த ஹோண்டா காருடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் ஹோண்டா வாகன சாரதியான கியூபெக்கைச் சேர்ந்த 51 வயதான ஆண், சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்த வாகனத்தில் பயணம் செய்த சக பயணியொருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும் மற்ற வாகனத்தில் அமெரிக்காவின் சவுத் கரொலினா மாநிலத்தைச் சேர்ந்த 38 வயதான ஆண், கடுமையான காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்த விபத்து தொடர்பில் தீவிர விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் விபத்து தொடர்பான தகவல்கள் இருந்தால் பொலிஸாருக்கு வழங்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

---

**டொரொன்டோவில்...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வணிக வளாகங்கள் மற்றும் பிற பொது இடங்களில் பாதிக்கப்பட்டவர்களை அணுகுகின்றனர்.

இந்த மோசடியின் ஒரு பகுதியாக, ஒரு சந்தேக நபர் பாதிக்கப்பட்டவர்களை அணுகி, பணத்திற்கு பதிலாக 10 டொலர் அல்லது 20 டொலரை இ-ட்ரான்ஸ்ஃபர் மூலம் அனுப்புமாறு கேட்பதாகத் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்டவரின் அலைபேசியை பெற்று சந்தேக நபர் 3,000 டொலர்கள் வரை தனது சொந்த கணக்கிற்கு மாற்றியுள்ளார் என குறிப்பிட்டுள்ளனர்.

பின்னர், சந்தேக நபர் செல்போனை பாதிக்கப்பட்டவரிடம் திருப்பிக் கொடுத்துவிட்டு அந்த இடத்தை விட்டு தப்பி ஓடுவிடுவதாகத் தெரிவிக்கபட்டுகின்றது.

இந்த மோசடியில் பாதிக்கப்பட்டவர்கள் எவ்வாறு குறிவைக்கப்பட்டனர் என்பது தெளிவாகத் தெரியவில்லை.

இ-ட்ரான்ஸ்ஃபர் செய்யும்போது உங்கள் அலைபேசிகளை எப்போதும் உங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வேறும் நபர்கள் உங்கள் செல்போனில் உள்ள வங்கி தகவல்களை அணுக அனுமதிக்காதீர்கள்," என பொலிஸார் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.

இந்த மோசடி குறித்து ஏதேனும் தகவல் தெரிந்தவர்கள் 416-808-3300 என்ற எண்ணில் பொலிஸாரை தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

---

**கனடாவுக்கு...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களின் எண்ணிக்கை குறைவடைந்ததால், கல்வி நிறுவனங்களுக்கு வருவாய் குறைவு ஏற்படும் அபாயம் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கனடா அரசு, 2025ஆம் ஆண்டில் 437,000 புதிய அனுமதிகளை வழங்க திட்டமிட்டுள்ளது. இது, 2024ஆம் ஆண்டின் இலக்கை விட 10 வீதம் குறைவாகும். இந்த மாற்றங்கள், கனடாவின் கல்வி துறையின் எதிர்கால வளர்ச்சியை பாதிக்கக்கூடும் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.



# கனடாவில் உணவு விலைகள் குறையும் சாத்தியம் இல்லை

கனடாவில் உணவுப் பொருள்களின் விலைகள் உடனடியாக குறையும் சாத்தியங்கள் கிடையாது என பொருளியல் நிபுணர்கள் எதிர்வுகூறியுள்ளனர்.

செப்டம்பர் 1 முதல், அமெரிக்கப் பொருள்களுக்கு கனடா விதித்திருந்த 25 வீத எதிர்-வரிகள் (counter-tariffs) நீக்கப்படவுள்ளன.

எனினும், உணவுப் பொருள்களின் விலைகள் உடனடியாகக் குறையாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விலைகள் உடனே குறையாது, ஆனால் விரைவில் குறையும் எனவும் சில வாரங்களில் விலைகள் குறையும் எனவும் குவெல்ஃப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் மைக் வான் மாசோவ் தெரிவித்துள்ளார்.

காய்கறிகள், பழங்கள், காப்பி, தேநீர், மாவு, சர்க்கரை, பாஸ்தா, ஆரஞ்சுப் பழச்சாறு போன்றவை விலை குறைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நீண்ட ஆயுட்காலம் கொண்ட உணவுப் பொருள்களின் விலை குறைவது கால தாமதமாகலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் இருந்து வரும் பழங்கள் மற்றும் காய்கறிகளின் விலை முதலில் குறையக்கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், சாக்லேட், பிட்னட் பட்டர், கேச்சப், மசாலா, பல் துவைக்கும் மருந்து, பாட்டில் தண்ணீர், காகிதத் துடைப்பான் போன்றவை – விலை குறைய அதிக நாள்கள் எடுக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

# கனடாவில் வீதி விபத்து; 19 வயது இளைஞர் பலி




கனடாவின் பர்லிங்டனில் இடம்பெற்ற சாலை விபத்தில் 19 வயது இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்விபத்து கெர்ன்ஸ் வீதி Kerns Road மற்றும் டுன்டாஸ் வீதி Dundas Street சந்திப்பில் இடம்பெற்றுள்ளது.

முதற்கட்ட விசாரணையில், கிழக்கு திசையில் சென்ற ஹொண்டா மோட்டார் சைக்கிள், மேற்கு திசையில் சென்ற ஃபோர்டு வாகனத்துடன் மோதியது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், மோட்டார் சைக்கிள் மற்றும் எஸ்.யூ.வீ. வாகனம் மோதியதில் அங்கு நின்றிருந்த இன்னும் இரண்டு வாகனங்கள் சேதமடைந்தன.

மோட்டார் சைக்கிளை ஓட்டிய ... வுனைச் சேர்ந்த 19 வயது இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

எஸ்.யூ.வீ வாகனத்தை செலுத்திய 56 வயது மில்டன் பகுதி நபர் எந்த காயமும் அடையவில்லை. இந்த விபத்து தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.